1975 நவம்பர் 12]

தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் அனுமதி.

*327 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975-76 கல்வி ஆண்டில் வேலேவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் அதிக அளவில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லே.

(இ) எழவில்லே.

புதிய மீன்பிடி படகுகள்.

*328 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாடு மீனள வளர்ச்சிக் கழக சார்பில் மீன்பிடி படகுகள் வாங்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலே: (அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

திரு. கா. வேழவேந்தன்: தலேவரவர்களே, ஏற்கனவே மீனளத் துறையின் சார்பில் மீன்பிடி படகுகளே வாங்கத் திட்டம் தீட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது. அப்படி ஆலோசனேயில் இருந்தது தள்ளிப் போடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலே: தலேவரவர்களே, அரசாங்கம் இதற்கு முன்பு இரண்டு மீன்பிடி டிராலர் வாங்க வேண்டுமென்று தீர்மானித்து, இத்தாலி நாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. ஒப்பந்தம் செய்துகொண்ட பிறகு அதை உடனே நிறைவேற்ற முடியாமல், இத்தாலி நாட்டிலிருந்து அந்த நிறுவனம் கூடுதல் பணத்தைக் கேட்டதால், பிறகு வேறு ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு, தற்போது

கூடிய விரைவில் இரண்டு டிராலர்களை வாங்கவும், தமிழ்நாட்டில் அதற்கு ஒப்புக்கொண்ட வகையில் இரண்டு டிராலர்கள் செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

திருமதி த. ந. அனந்தநாயகி : மீன்பிடி படகுகள் கொடுக்கப் படுமா என்று கேட்டதற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சில படகுகள் மீன் பிடிப்பதற்குப் பயன்படவில்லை. இவைகளை வேண்டாமென்று சொல்லுகிறார்கள். முப்பத்து ஆறு அடிப் படகுகள் கடலில் போகவில்லை என்பது இந்த அரசுக்குத் தெரியுமா ? அதற்கு பதிலாக 32 அடிப் படகுகள் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: மீனளக் குழுவின் மூலம் 30 அடி, 32 அடி படகுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

புன்னைக்காயலில் மீன்பிடி துறைமுகம்.

* 329 வின—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புன்னைக்காயல் கிராமக் கடற்கரைப் பகுதியை மீன்பிடித் துறைமுகமாக மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, புன்னைக் காயல் கடற்கரைப் பகுதியை மீன்பிடி துறைமுகமாக மாற்று வதற்கு எப்போதேனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா ? மேற்படி இடத்தை மீன்பிடி துறைமுகமாக மாற்றுவதற்கு என்ன காரணத்தினால் அரசு மறுக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, புன்னைக் காயல் முகத்துவாரத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு சார்பில் பெங்களூரில் இருக்கிற ஆய்வு நிறுவனத்தால் ஆய்வு செய்யப்பட்டு அங்கு மீன்பிடி